IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO. 92/2014

Deposition of Witness : PW-2

Name : கருணாகரன்

Father's Name /W/o : த/பெ. சோனாச்சலம்

Religion : இந்து

Caste : -

Calling : ஆவண எழுத்தர்

Address : அரக்கோணம் வட்டம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day 29.01.2024

முதல் விசாரணை:

1. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை பெற்று வந்துள்ளேன். நான் அரக்கோணம் பத்திர பதிவு அலுவலத்தின் அருகே ஆவண எழுத்தராக வேலை செய்து வருகிறேன். ஆவண எழுத்தருக்கான லைசென்சை வைத்துள்ளேன். அதன் நகலை தாக்கல் செய்கிறேன். லைசென்சை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு நகல் வா.சா.ஆ.44 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவரின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு வா.சா.ஆ.45 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.7 பொது அதிகார பத்திரத்தில் வரைவு செய்தவர் என்ற இடத்தில் உள்ள கையெப்பம் என்னுடையதுதான். 16.03.1995 ல் தீனதாயளன் பெயரில் பலராமன் மற்றும் ராஜம்மாள் எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரமாகும். பலராமன் மற்றும் ராஜம்மாள் என் முன்னிலையில் வந்து கைநாட்டு வைத்தார்கள். இதில் சாட்சியாக தமோதரன் மற்றும் குப்புசாமி சாட்சி கையெப்பம் போட்டுள்ளார்கள். சாட்சிகள் கையெப்பமிட்ட பிறகு நான் கையெப்பம் இட்டுள்ளேன். இந்த ஆவணத்தை

தட்டச்சு செய்தவர் பத்மா. இந்த பொது அதிகார பத்திரத்தில் கண்டுள்ள சரத்துக்களுக்கு உரிமை பொது அதிகார முகவருக்கு கொடுக்கப்பட்டது. பொது அதிகார பத்திரத்தின் சொத்து விவரத்தில் உள்ளது ஆத்தூர் கிராம சொத்தாகும். சர்வே எண். 340/2. விஸ்தீரனம் 4 ஏக்கர் 21 செண்ட் ஆகும்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)